# UDUVIL GIRLS' COLLEGE

"நான் ஆவியோடும் பாடுவேன்,
கருத்தோடும் பாடுவேன்."

1ஆம் கொரிந்தியர் 14 ; 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதங்களின் முதலடி அகராதி


| | | | |
|---|---|---|---|
| அதிகாலையில் உனைத் தேடுவேன் | ... | ... | 14 |
| அல்லேலூயா கர்த்தரையே | ... | ... | 60 |
| ஆத்துமமே என் முழுஉள்ளமே | ... | ... | 4 |
| ஆரிவராராரோ இந்த அவனியோர் | ... | ... | 29 |
| ஆயிரம் ஆயிரம் பாடல்களை | ... | ... | 59 |
| ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே | ... | ... | 12 |
| இயேசு என்ற திரு நாமத்திற்கு | ... | ... | 11 |
| இராக்காலம் பெத்தலகேம் மேய்ப்பர்கள் | ... | ... | 30 |
| இருள் சூழும் காலம் இனி வருதே | ... | ... | 54 |
| இறைவன் இன்று பவனி வந்தால் | ... | ... | 56 |
| இயேசுவின் பாதம் பூசை செய்திடுவோம் | ... | ... | 2 |
| இன்று கிறிஸ்து எழுந்தார் | ... | ... | 38 |
| இயேசென்னை நேசிக்கிறார் | ... | ... | 43 |
| இயேசு எங்கள் மீட்பர் | ... | ... | 42 |
| இயேசு ராஜனின் திருவடிக்கே | ... | ... | 50 |
| இயேசுவின் நாமத்தைப் போற்றிடுவோம் | ... | ... | 51 |
| இயேசுவை நாம் எங்கே காணலாம் | ... | ... | 67 |
| உன்னதமானவரின் உயர் | ... | ... | 63 |
| உனக்கொத்தாசை வரும் | ... | ... | 23 |
| உண்மையாம் உபவாசம் எது | ... | ... | 55 |
| உடைபட்ட மலையே | ... | ... | 34 |
| எந்நாளுமே துதிப்பாய் | ... | ... | 8 |
| எந்தன் அன்புள்ள ஆண்டவர் | ... | ... | 52 |
| எந்தன் நாவில் புதுப்பாட்டு | ... | ... | 75 |
| எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் | ... | ... | 6 |
| எல்லாம் இயேசுவே | ... | ... | 22 |
| என் அருள்நாதா இயேசுவே | ... | ... | 35 |
| என்னை மறவா இயேசு நாதா | ... | ... | 48 |
| எனக்காய் ஜீவன் விட்டவரே | ... | ... | 70 |
| எனக் கொத்தாசை வரும் | ... | ... | 64 |
| எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் | ... | ... | 71 |
| ஒரு போதும் மறவாத | ... | ... | 74 |
| கர்த்தர் பெரியவர் | ... | ... | 3 |
| கர்த்தர் என் மேய்ப்பராய் | ... | ... | 18 |
| கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான் | ... | ... | 37 |
| கல்வாரி மாமலையில் | ... | ... | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பார் உன்னைக் காப்பார் ... ... 24
குருசினில் தொங்கினார் ... ... 32
கேள் ஜென்மித்த ராயர்க்கே ... ... 26
சத்தியமும் ஜீவனுமாய் ... ... 21
சாந்தமுள்ள இயேசுவே ... ... 44
சிலுவையில் மாண்ட ... ... 33
சீர் இயேசு நாதனுக்கு ஜெய மங்களம் ... ... 13
சுந்தரப் பரமதேவ ... ... 7
தந்தானைத் துதிப்போமே ... ... 65
தந்தேன் என்னை இயேசுவே ... ... 62
தாசரே இத்தாரணியை அன்பாய் ... ... 25
திருப்பாதம் நம்பி வந்தேன் ... ... 66
துதித்துப் பாடிட ... ... 10
துள்ளித் துள்ளிப் பாலனே ... ... 46
தேவ பிதா எந்தன் மேய்ப்பரல்லோ ... ... 17
தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும் ... ... 61
தோத்திர பாத்திரனே ... ... 15
தோத்திரம் இயேசுநாதா ... ... 9
தோத்திரம் பாடிப் போற்றுவோம் ... ... 57
நமக்கொரு பாலன் ... ... 27
நன்மைகளால் நிறைந்துள்ள ... ... 72
நீ இறைவனைத் தேடிக் கொண்டிருக்க ... ... 68
நேர்த்தியான தனைத்தும் ... ... 73
பர மண்டலங்களில் வீற்றிருக்கும் ... ... 47
பரம பிதா நீரெமக்கு ... ... 20
பாரினில் மனுவானார் போற்றுவோம் ... ... 28
பாரில் மாந்தர்க்காக ... ... 31
பாடித் துதி மனமே ... ... 5
போற்றித் துதிப்போம் ... ... 53
மன்னிப்பு மன்னிப்பு ... ... 16
முன்னுள்ள புதர்களின் மத்தியில் ... ... 69
வரவேணும் பரனுவியே ... ... 19
வருத்தப் படுபவர்க்கும் ... ... 58
மங்களம் மங்களம் யேகோவா ... ... 39
வா எங்கள் சுவாமி ... ... 45
வானத்திலிருந்து வையகம் எழுந்து ... ... 1
வான பிதா தந்த வேதத்திலே ... ... 40
விந்தைக் கிறிஸ்தேசு ராசா ... ... 36
யாரிலும் மேலான அன்பர் ... ... 41


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் கீதங்கள்

## 1

இராகம் ; சங்கராபரணம் தாளம் : ரூபகம்

### பல்லவி

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக.

### சரணங்கள்

1 உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே
உண்மையின் வடிவே வருக
பயிருக்கு மழையே பார்வையின் ஒளியே
பரமனின் அருளே வருக.

2 கீழ்த்திசை வானில் வாழ்த்திசை பாடும்
காலைக் கதிரே வருக
ஆழ்கடல் மீதினில் அலையுடன் ஆடும்
ஆனந்த நிலவே வருக.

3 மனிதனின் மனதில் மணியெனத் துலங்கும்
மாணிக்க விளக்கே வருக
இனியநல் வாழ்வை உவப்புடன் வழங்கும்
இன்னருட் பெருக்கே வருக.

## 2

### பல்லவி

இயேசுவின் பாதம் பூசை செய்திடுவோம்
செப நறு மலராலே
அர்ச்சனை செய்வோம் அன்பரின் நாமம்
பிரார்த்தனை முறையாலே.

### சரணங்கள்

1 நாற்பது நாளாய் நசரேய வனத்தில்
நயந்து செபித்தாய் நீ;
தோற்கடித்த பேய் மேற்கொள்ளா தெம்மை
ஊற்றிடும் உமதாவி — கிறிஸ்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 செபமொழி வாசகம் திருவாய் மலர்ந்த
தபகுரு கிறிஸ்தரசே;
துயருடன் வந்துன் அருள்முகங் கண்டோம்
தயவுடன் அணைப்பாயே — அன்பாய்

3 உலகம் பேய் மரணம் தோற்கடித்தாயே
நிலவிய செபத்தாலே;
கவலை கொள்ளாதிர் கருத்துடன் செபியும்
நிலையுற்ற சாந்தி பெற்றீர் — என்ற

# 3

பல்லவி

கர்த்தர் பெரியவர் அவர் நமது
தேவனுடைய நகரத்திலும்
தமது பரிசுத்த பர்வதத்திலும்
மிகத் துதிக்கப்படத் தக்கவர்.

சரணங்கள்

1 வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமும்,
சர்வ பூமியின் மகிழ்ச்சியாயிருக்கிறது,
அது மகாராசாவின் நகரம்.

2. அதின் அரண்மனைகளில் தேவன் உயர்ந்த
அடைக்கலமா யறியப்பட்டுள்ளார்,
இதோ இராசாக்கள் கூடிக்கொண்டு ஏகமாய்க்
கடந்துகொண்டு வந்தார்கள்.

3 தேவனே உமது ஆலயத்தின் நடுவில்
உம்முடைய கிருபையை
நாங்கள் சிந்தித்துக்கொண் டிருக்கிறோம்,
உம் நாமம் விளங்குகிறது.

4 பின்வரும் சந்ததிக்கு விபரமாய்க் கூறவே
அதின் அலங்கத்தைக் கவனியுங்கள்
அலங்காரத் துடனுள்ள அரண்மனையை
நீங்களுற்றுப் பார்த்திடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 என்றென்றைக்குமுள்ள சதாகாலமுமே
எங்கள் தேவன் அவரே,
மரணபரியந்தம் நம்மை நடத்தும்
மாறாக் கர்த்தரும் அவரே.

# 4

சங்கராபரணம் — ஏகதாளம்

பல்லவி

ஆத்துமமே! என் முழு உள்ளமே — உன்
ஆண்டவரைத் தொழுதேத்து — என்றுமுன்மேல்
அன்புவைத் தாதரித்த உன்
ஆண்டவரைத் தொழுதேத்து.

சரணங்கள்

1 போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள, உன் — ஆத்து

2 தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலகமுன் தோன்றி ஒழியாத, உன் — ஆத்து

3 தினம் தினம் உலகில் நீ செய் பலதுரோக
வினைபொறுத் தருளும் மேலான, உன் — ஆத்து

4 வாதை, பிணி, துன்பம் மாற்றி, அனந்த
உதவி செய்துனக்கே உயிர் தந்த, உன் — ஆத்து

5 உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றுங் கிருபையினால் முடிசூட்டும், உன் — ஆத்து

# 5

பிலகிரி — ரூபகதாளம்

பல்லவி

பாடித் துதிமனமே — பரனைக்கொண்
டாடித் துதிதினமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனுபல்லவி

நீடித்த காலமதாகப் பரன் எம்மை
நேசித்த பட்சத்தை வாசித்து, வாசித்துப் — பாடி

### சரணங்கள்

1 தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னறச்
செப்பின தேவபரன் இந்தக்காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்துத் தியானித்துப் — பாடி

2 சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்க ளாக்கின சந்தோஷத் துக்காகப் — பாடி

3 எத்தனை தீர்க்கர், அனேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள் இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்
கித்தனை யாய்க்கிருபை வைத்தநம் கர்த்தனைப் — பாடி

## 6

### பல்லவி

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
ஏகவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்.

### சரணங்கள்

1 ஆதியும் நீரே — அந்தமும் நீரே
ஜோதியும் நீரே — என் சொந்தமும் நீரே — எந்த

2 தாய்தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே — என் தாரகம் நீரே — எந்த

3 வாழ்விலும் நீரே — தாழ்விலும் நீரே
வாதையில் நீரே — என் பாதையில் நீரே — எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 ஞான வைத்தியராம் — ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் — என் நண்பரும் நீரே — எந்த

5 மீட்பரும் நீரே — மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே — என் மகிமையும் நீரே — எந்த

6 தேவனும் நீரே — ஜீவனும் நீரே
ராஜனும் நீரே — என் சர்வமும் நீரே — எந்த

## 7

சங்கராபரணம் ஆதிதாளம்

### பல்லவி

சுந்தரப் பரம தேவ மைந்தன் யேசுக்கிறிஸ்துவுக்கு
தோத்திரம், புகழ்ச்சி, நித்திய கீர்த்தனம் என்றும்.

### அனுபல்லவி

அந்தரம் புவியும் தந்து, சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்; நம்மை ஒன்றாய்க் கூட்டினார்; அருள்முடி
சூட்டினார்; கிருபையால் தேற்றினாரே துதி, துதி — சுந்

### சரணங்கள்

1 பாதகப் பசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி மீட்டாரே;
வேத பிதாவுக் குகந்த ஜாதியாகக் கூட்ட வந்த
மேசியாவைப் பற்றும் விசுவாச வீட்டாரே.
கோதணுகா நீதிபரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்; பவத்துயர் போடுங்கள்; ஜெயத்தைக்கொண்
டாடுங்கள்; துதிசொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும்-சுந்

2 விண்ணிலுள்ள ஜோதிகளும், எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே,
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும் பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதிசொல்லி ஏத்தவே,
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணிய குமாரனைக்கொண்
டாடிட, அவர் பதம் தேடிட, வெகுதிரள்
கூடிட, துதிபுகழ் பாடிட, பாடிட, என்றும் — சுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8

பியாக் ரூபகதாளம்

### பல்லவி

எந்நாளுமே துதிப்பாய் — என்னாத்துமாவே, நீ
எந்நாளுமே துதிப்பாய்!

### அனுபல்லவி

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது — எந்நா

### சரணங்கள்

1 பாவங்கள் எத்தனையோ, — நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ,
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மா தயவை நினைந்து, — எந்நா

2 எத்தனையோ கிருபை, — உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை,
நித்தமுனை முடி சூட்டினதுமன்றி,
செத்திடாதபடி ஜீவனை மீட்டதால், — எந்நா

3 நன்மையாலுன் வாயை — நிறைத்தாரே, பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை,
உன் வயது கழுகைப்போல் பலங்கொண்டு,
இன்னும் இளமைபோலாகவே செய்ததால், — எந்நா

4 தந்தை தன் பிள்ளைகட்கு — தயவோடிரங்காரோ?
தந்தை தன் பிள்ளைகட்கு,
எந்த வேளையு மவரோடு நீ தங்கினால்,
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே; — எந்நா

## 9

1 தோத்திரம் இயேசுநாதா உமக்கென்றும் தோத்திரம்
இயேசுநாதா
தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திருநாமத்தி னாதரவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 வான தூதர் சேனைகள் மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித் துதிக்கப்பெறும்
மன்னவனே உமக்கு.

3 இத்தனை மகத்வமுள்ள பதவி இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு, நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்.

4 நின் உதிரமதினால், திறந்த நின் ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்.

5 இன்றைத் தினமதிலும் ஒருமித்துக் கூடவும் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
தோத்திரம் தோத்திரமே.

6 நீரல்லால் எங்களுக்குப் பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில் வேறேயொரு
தேட்டமில்லைப் பரனே.

## 10

துதித்துப் பாடிட பாத்திரனே
துங்கவன் யேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசஞ் செய்யும்
தூயவனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே;

பல்லவி

ஆ! அற்புதமே
அவர் நடத்துதலே ஆனந்தமே
பரமானந்தமே நன்றியால்
உள்ளமே மிகப் பொங்கிடுதே நாம்
அல்லேலூயா துதி சாற்றிடுவோம்.

கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் தோத்தரிப்போமே — ஆ! அற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கானதால் தோத்தரிப்போமே — ஆ! அற்

இந்த வனாந்தர யாத்திரையால்
இன்பராம் யேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிட மானதால் தோத்தரிப்போமே — ஆ! அற்

வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைவில் நெருங்கிடத் தோத்தரிப்போமே — ஆ! அற்

## 11

பியாக் — ஆதிதாளம்

பல்லவி

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்.

சரணங்கள்

1 வானிலும், பூவிலும் மேலான நாமம்
வல்லமை யுள்ள நாமமது — தூயர்
சொல்லித் துதித்திடும் நாமமது — இயேசு

2 வேதாளம், பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது — நாமும்
வென்றிடு வோமிந்த நாமத்திலே — இயேசு

3 பாவத்திலே மாளும் பாவியை மீட்கப்
பாரினில் வந்தமெய் நாமமது — பர
லோகத்தில் சேர்க்கும் நாமமது — இயேசு

4 உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது — உல
கெங்கும் ஜொலித்திடும் நாமமது — இயேசு

5 சஞ்சலம், வருத்தம், சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது — தடை
முற்றும் அகற்றிடும் நாமமது — இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

1 ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில் — ஆத்துமமே

பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி
பொங்கிடுதே என்னுள்ளத்திலே
பேரன்பின் பெருவெள்ளமே.

2 கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணி போலெனைக் காத்தாரே
கவலைகள் தீர்த்துக் கண்ணீர் துடைப்பார்
கருத்துடன் பாடிடுவாய். — ஆத்துமமே

3 படகிலே படுத்து உறங்கினாலும்
கடும்புயல் அடித்துக் கவிழ்த்தினாலும்
கடலையும் காற்றையும் அமர்த்தி எமைக்
காப்பாரே அல்லேலூயா. — ஆத்துமமே

4 பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடித் தரித்திடுவோம்
விரைந்தவர் வந்திடுவார். — ஆத்துமமே

## 13

சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

சீர் யேசு நாதனுக்கு ஜெய மங்களம்: ஆதி
திரி யேக நாதனுக்குச் சுப மங்களம்.

அனுபல்லவி

பாரேறு நீதனுக்கு. பரமபொற் பாதனுக்கு,
நேரேறு போதனுக்கு, நித்தியசங் கீதனுக்கு —சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1 ஆதிசரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்:
அகிலப்பிர காசனுக்கு நேசனுக்கு மங்களம்;
நீதிபரன் பாலனுக்கு, நித்திய குணுளனுக்கு
ஓதும்அனு கூலனுக்கு, உயர்மனு வேலனுக்கு —சீர்

2 மாணுபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்:
வளர்கலைக் கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்:
காணுன்நல் தேயனுக்கு, கன்னிமரி சேயனுக்கு,
கோனுர் சகாயனுக்கு, கூறுபெத்த லேயனுக்கு —சீர்

3 பத்துலட் சணத்தனுக்குச் சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு, நித்தனுக்கு மங்களம்:
சத்தியவிஸ் தாரனுக்கு, சருவாதி காரனுக்கு,
பத்தர்உப காரனுக்கு, பரம குமாரனுக்கு, —சீர்

## 14

நவரோஜ் ஏகதாளம்

பல்லவி

அதிகாலையிலுனைத் தேடுவேன் முழுமனதாலே,
தேவாசீர்வாதம் பெற நாடுவேன், ஜெபதபத்தாலே.

அனுபல்லவி

இதுகாறும் காத்த தந்தை நீயே!
இனிமேலும் காத்தருள் செய்வாயே:
பதிவாக உன்னிலே நான் நிலைக்கவே
பத்திரமாய் எனை உத்தமனுக்குவாய், தேவே —அதி

சரணங்கள்

1 போன ராமுழுவதும் பாதுகாத்தருளின போதா - எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்தநல் நாதா,
ஈனப் பாவிக்கேது துணை பூவிலுண்டு, பொற்பாதா
எனக்கான ஈசனே! வான ராசனே!
இந்த நாளிலும் ஒரு பங்கமில்லாமல் கா, நீதா! — அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 பலசோதனைகளால் சூழ்ந்து நான் கலங்கிடும்போது - தப்
பாது நின் கிருபை தாங்கிட வேணும் அப்போது,
விலகாது என் சமுகம் என்ற வாக்கில் தவறேது;
விசுவாசங் கொண்டு மெய்ப் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது —அதி

3 நரர் யாவர்க்கு முற்ற நண்பனாய் நடந்திடவையே! - தி
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே!
பரலோக ஆவியைநல் மாரி போலெனிலே பெய்யே?
புகழான நாதனே! வேத போதனே,
பூரணமாய் உனைப் போற்றுவேன், தினம் தினம் மெய்யே! — அதி

## 15

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

தோத்திர பாத்திரனே, தேவா,
தோத்திரம் துதியுனக்கே!
நேத்திரம் போல் முழுராத்திரியுங் காத்தாய்
தோத்திரம் துதியுனக்கே!

சரணங்கள்

1 சத்துரு பயங்களின்றி - நல்ல
நித்திரை செய்ய வெமைப்
பத்திரமாய்ச் சீராட்டி யுறக்கியே
சுற்றிலுங் கோட்டையானாய் - தோத்

2 விடிந்திருள் ஏகும் வரை - கண்ணின்
விழிகளை மூடாமல்
துடிதாய் தந்தைபோல் படிமிசை எமது
துணைஎனக் காத்தவனே. —தோத்

3 காரிருள் அகன்றிடவே, - நல்ல
கதிரொளி திகழிடவே,
பாரினைப் புரட்டி உருளச் செய்தே கண
பாங்கு சீராக்கி வைத்தாய். — தோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 இன்றைத் தினமிதிலும் - தொழில்
எந்தெந்த வகைகளிலும், உன்
திருமறைப்படி ஒழுகிட எமக்கருள்,
உதவியே காத்துக்கொள்வாய். —தோத்

## 16

இராகம்: மோஹனம் தாளம்; ஆதி (திஸ்ர நடை)

பல்லவி

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்புத் தாருமே இறைவா
மன்னிப்புத் தாருமே இறைவா.

சரணங்கள்

1 ஆண்டவர் ஆன்மாவை விரும்புகின்றார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகின்றார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் — நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்:

2 என் சொத்தைத் தந்திடும் என்று கேட்டான்
தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான்
தன் இஷ்டம் போலங்கே செலவு செய்தான் — அவன்
தன் வாழ்வைப் பாவத்தில் மூழ்கடித்தான்.

3 பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்
தன் தந்தை அன்பினைக் கனவு கண்டான்
மன்னிப்புக் கேட்டங்கே ஓடிவந்தான் — தந்தை
மன்னித்து மகனை அணைத்து ஏற்றார்.

4 ஆண்டவர் ஞானத்திற் கினிமையுண்டு
கண்டிக்கக் காலத்தைக் கடத்துகின்றார்
கண்டித்துக் கருணைச்சொல் கூறுகின்றார் — பாவி
திருந்திட அருட்கொடை வழங்குகின்றார்.

5 குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால் தேவன்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17

அரிகாம்போதி ஆதிதாளம்

பல்லவி

தேவபிதா எந்தன் மேய்ப்பர் அல்லோ;
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

அனுபல்லவி

ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்
அவர் மேய்த் தமர்நீர் அருளுகின்றார். —தேவ

சரணங்கள்

1 ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்; —தேவ

2 சாநிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்குகண் டஞ்சேனே;
வானபரன் என்னோடிருப்பார்,
வளைதடியும் கோலுமே தேற்றும். —தேவ

3 பகைவர்க் கெதிரே ஒருபந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுகதைலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார். —தேவ

4 ஆயுள் முழுவதும் என்பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்;
நேயன் வீட்டினிற் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன். —தேவ

## 18

பல்லவி

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே
தாழ்ச்சி அடையேன் என்றுமே.

அனுபல்லவி

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1 ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிரப்புகிறார்
மகிமையின் நாமத்தின் நிமித்தம் அவர்தம்
நீதியின் பாதையில் நடத்துகிறார். —கர்த்தர்

2 மரண பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே அவர்
கோலும் தடியும் என்னைத் தேற்றும். —கர்த்தர்

3 சத்துருக்கள் முன்பில் எனக்காகப்
பந்தியொன் றுயத்தம் செய்தார்
என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து என்
பாத்திரம் நிரம்பி வழியச் செய்தார். —கர்த்தர்

## 19

கரஹரப்பிரியா ஆதிதாளம்

பல்லவி

வரவேணும், பரஞானமே,
இறங்குஞ் சுடராய் மேவியே.

அனுபல்லவி

மருளாம் பாவம் மருவிய எனக்கு
வானுக்கினியால் ஞான திட்சை தர, —வர

சரணங்கள்

1 பலமான எப்பாவமும், பாழாக்கும் மாநோய்களும்,
வலிய கொடும் ரோசமும், மாம்ச சிந்தை யோடுமே;
பலிபீடத்தில் எனைப் பலியாக வைத்தேன்,
எலியாவின் செபத்துக் கிரங்கிய வண்ணம், —வர

2 என்றன் பாவம் யாவையும் எரிக்கும்வகை தேடியும்,
எங்கும் இந்த லோகத்தில் எத்தியுமே காண்கிலேன்;
என்றன் செயலால் யாதொன்றும் முடியா(து)
இன்றே வானுக்கினி வரவேணும், —வர

3 குடிகொள் எந்தப் பாவமும் அடியோடே தொலைந்திடும்,
தடுத்தாட் கொள்ளும் தோஷமும் சாம்பலாகச் செய்திடும்;
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல்போல்
அடியேன் யேகவுக்கென்றும் பணி செய்ய, —வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

குறிஞ்சி

ஆதிதாளம்

கண்ணிகள்

1 பரமபிதா. நீரெமக்குப் பாத்திபராயிரு மதுபோதும்
தருமகுண தயைவடிவே, தரிசனம் தினம்தினம்
தந்தாற் போதும்.

2 அரைமனதால் உமைத்தொழுது அப்பாவென்று நாம்
செப்பவில்லை;
குறையறவே முழுமனதால் குடும்பமுழுதுமுமை
நம்பினோமே.

3 நீர்பெருக, நீர்வாழ்க, நீதிபரா நின்நாமம் உயர்க,
பாரிலடியார் சிறுக, பாடுவோம், ஆடுவோம்,
தேடுவோமே.

4 கள்ளமில்லா உள்ளமுள்ள கனிவுடைய பிள்ளைகட்கு
வள்ளலே, நீர் நல்லவராய் வாழ்வுடனுறுதல் நல்கிடுவீர்.

# 21

1 சத்தியமும் ஜீவனுமாய் நித்தமும் வாழ்ந்திடும்
கர்த்தனே, எங்கட்குக் கரம்தந்து என்றும் தாங்கிடும்;
சுத்தமாய் நடப்பதற்குச் சுத்த ஆவி தந்திடும்;
சித்தமோடு இந்தவேளை வந்திறங்கிடும்.

பல்லவி வானம் திறந்தருளும் பல தானங்களை யிந்நேரமிதில்
வானவனே, ஞானமுள்ள வல்லகுரு நாதனே,
தேனினும் மதுரம் திவ்விய ஆசீர்வாதங்கள்.

2 என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனூற்றிடும்,
இன்னும் இன்னும், ஈசனே உம் நல்வரங்களீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமல் கண்மணிபோல் காத்திடும்,
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே.

3 சுயமாடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே,
தயவு தாழ்மையினுவி தந்தருள வேணுமே,
மாயமான யாவினின்றும் மனமமதைப் பேணுமே,
ஆயனே அடியார்களின் அடைக்கலமே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 அதிகமதிக மன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மைப் போற்றிட
அதிசயமே அசத்தின் குறைகளகற்றியே
இது சமய முன்னத பெலனீந்திடும்.

## 22

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

எல்லாம் யேசுவே — எனக்கெல்லாம் யேசுவே.

அனுபல்லவி

தொல்லைமிகு மிவ்வுலகில் — எல்லாம் யேசுவே —எல்

சரணங்கள்

ஆயனும் சகாயனும் நேயனு முபாயனும்
நாயனு மெனக்கன்பான ஞானமண வாளனும், —எல்

தந்தைதா யினம்சனம் பந்துளோர் சிநேகிதர்
சந்தோட சகலயோக சம்பூரண பாக்கியமும், —எல்

கவலையி லாறுதலும் கங்குலிலெனச் சோதியும்
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔஷதமும், —எல்

போதக பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும், —எல்

அணியு மாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரியமத்தி யஸ்தனும் —எல்

ஆனசீவ அப்பமும் ஆவலுமென் சாவலும்
ஞானகீதமும் களிப்பும் நாட்டமும் கொண்டாட்டமும் —எல்

## 23

பிலகரி ஆதிதாளம்

பல்லவி

உனக் கொத்தாசை வரும் நல்
உயர் பருவதம், இதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவோனே, —உன

சரணங்கள்

1 வானம், புவி, திரையும் வகுத்த தன்மைப்பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமை யுள்ளதல்லலோ, —உன

2 காலைத்தன் ஊடவொட்டார். கரத்தைத் தளரவொட்டார்,
மாலை உறங்கமாட்டார், மறதியாய்ப் போகமாட்டார் —உன

3 கர்த்தருன்னைக் காப்பவராம், கரமதிற் சேர்ப்பவராம்;
நித்தியமு முந்தனுக்கு நிழலா யிருப்பவராம். —உன

4 பகலில் வெயிலெனினும் இரவில் நிலவெனினும்
துயர் தருவதுமில்லை, துன்பஞ் செய்வதுமில்லை. —உன

5 தீங்கு தொடராதுன்னை. தீமை படராதுன்மேல்;
தாங்குவார் தூதர்கோடி தாவிட ருதபடி, —உன

6 போக்கும் ஆசீர்வாதமாம். வரத்தும் ஆசீர்வாதமாம்,
காக்கைக் குஞ்சுகள்முதல் கதறி நம்பிவிடுமே, —உன

7 துன்ப *துயரத்திலும், துக்க சமயத்திலும்,
இன்ப முறும்பொழுதும் எல்லாம் உனக்கவரே. —உன

## 24

பல்லவி

காப்பார், உன்னைக் காப்பார்,
காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல்
காத்திடுவார்; கலங்காதே, மனமே, காத்திடுவார்.

சரணங்கள்

1 கண்டுனை அழைத்தவர் கரமதைப் பார், அவர்
கைவிடாதிருப்பார்;
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை
எண்ணிப்பார்,
எண்ணிப்பார், எண்ணிப்பார், எண்ணிப்பார்; என்றுமதை
எண்ணிப்பார். —காப்

2 இஸ்ரவேலருக்கு வாக்குப்படி இன்பக்கானான்
அளிக்கவில்லையோ?
இப்போதிவர்களை நிர்மூலம் செய்வதென்று
பின்னு மிரங்கவில்லையோ?
இல்லையோ, இல்லையோ, இல்லையோ, மனஸ்தாபங்
கொள்ளவில்லையோ? — காப்

## 25

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

தாசரே இத்தாரணியை அன்பாய்
யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.

அநுபல்லவி

நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,
வெளிச்சம் வீசுவோம். —தாச

சரணங்கள்

1 வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்தோரை
வருத்தியன்பாய் அழைத்திடுவோம்,
உரித்தாய் யேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீத்தாரே-தாச

2 பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
படசமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,
யேசு கனிந்து, திரிந்தனரே. —தாச

3 நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணாக் கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்திற்குள், படுகுழிக்குள், விழுந்தனரே —தாச

4 மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்;
ஊக்கமாகச் செபித்திடுவோம், நாம் முயன்றிடுவோம்,
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம் —தாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## Hark, the herald angels sing

Mendelssohn S. S. S. 30.

1 கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே;
அவர் பாவ நாசகர்'
சமாதான காரணர்.
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர்போற் கெம்பீரித்து,
பெத்தலகேமிற் கூடுங்கள்.
ஜென்ம செய்தி கூறுங்கள்.
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே.

2 வானோர் போற்றும் கிறிஸ்துவே,
அகிலம் ஆளும் நாதரே,
ஏற்ற காலம் தோன்றினீர்,
கன்னியிடம் பிறந்தீர்.
வாழ்க நர தேவனே,
அருள் அவதாரமே!
நீர் இம்மானுவேல், அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தராய்.
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே.

3 வாழ்க, சாந்த பிரபுவே!
வாழ்க நீதிச் சூரியனே.
மீட்பராக வந்தவர்,
ஒளி, ஜீவன் தந்தவர்!
மகிமையை வெறுத்து,
ஏழைக்கோலம் எடுத்து,
சாவை வெல்லப் பிறந்தீர்,
மறுஜென்மம் அளித்தீர்.
கேள், ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27

பியாக் ஆதிதாளம்

கண்ணிகள்

1 நமக்கொரு பாலன் நாநிலந் தனிலே
நாடி வந்தார், இதோ பாரீரோ,
நாமவர் பாதம் சென்றுமே பணிவோம்,
நண்பரே, நீவிர் வாரீரோ.

2 அவருடை நாமம் அதிசயமானவர்
ஆலோசனைக் கர்த்தர் என்றுரே;
ஆமாம், அதிசயம்! அவர் அடி பணிவோம்,
அன்பரே, நீவிர் வாரீரோ.

3 நித்தியரான சமாதானப் பிரபு
நீணிலம் வந்தார் பாரீரோ;
துத்தியம் அவர்பதம் நித்தியம் சொல்வோம்,
நேசரே, நீவிர் வாரீரோ.

4 பெத்தலே நகரில் புத்திரன் உதித்த
புதுமை இதென்ன? பாரீரோ;
பேசரும் அன்பர் தாசருக்காயே
தாழ்விடம் வந்தார் பாரீரோ.

5 சந்தோஷ மெமக்குச் சமாதானம் புவிக்குத்
தந்திட்டார் இன்று பாரீரோ;
தாசரு மன்பால் நேசருக்காயே
தந்திட்டா ரென்று பாரீரோ.

## 28

பியாக் ஏகதாளம்

பல்லவி

பாரினில் மனுவானுர் போற்றுவோம் — பரமராசன்
பாவிகள் நாம்துதி சாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

வாரும், அதிசயம் பாரும், பவவினை
தீரும், மிகக் களிகூரு மெல்லாரும், ஓ —பாரினில்

சரணங்கள்

1 சீரில் மனுடர்கள் நேருற்றிடஅவ தாரமான குமாரனே - புகழ்
ஆரும் பரமசிங்கார ஒயில்விட்டிப் பாரில்மேவு முதாரனே - நிதம்
சேராபியரொடு கேராபியர் துதிகூறுஞ்சர் வாதிகாரனே - துதி
சாருஞ்சவருப காரமேன்மையை
ஓரும் பரகதி சேருமெல்லாரும், ஓ — பாரினில்

2 ஆதியந்த மில்லாத தேவபிரசாத சற்குருநாதனே - இப்
பூதலந்தனி லேதமின்றியோர் மாதிடம்வரு நீதனே - சங்
கீத துதியொடெப் போதுமடியர்கள் பாதசேவைசெய்
வேத முனிவர்க ளோது முறையொரு போதனே - பூவில்
சேதமற வெமைப் பாதுகாத்தருள் —பாரினில்

## 29

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

ஆரிவ ராராரோ — இந்த
அவனியோரர் மாதிடமே
ஆனடை குடிலிடை மோனமா யுதித்தஇவ்
வற்புத பாலகனார் ?

சரணங்கள்

1 பாருரு வாகுமுன்னே - இருந்த
பரப்பொருள் தானிவரோ ?
சீருடன் புவி,வான் இவை பொருள் யாவையுஞ்
சிருட்டித்த மாவவரோ ? —ஆரிவ

2 மேசியா இவர்தானோ ? -நம்மை
மேய்த்திடும் நரர்கோனோ ?
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் ஆதி
அன்புள்ள மனசானோ ? —ஆரிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 தித்திக்குந் தீங்கனியோ? -நமது
தேவனின் கண்மணியோ?
மெத்தவே உலகிருள் நீக்கிடு மதிசய
மேவிய விண்ஒளியோ? —ஆரிவ

4 வட்டத்துத் துரைமகனோ? -நம்மைப்
பண்புட னாள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக்
காட்டிடும் தாயகனோ' —ஆரிவ

5 ஜீவனின் அப்பமோதான்? -தாகம்
தீர்த்திடும் பானமோதான்?
ஆவலா யேழைக ளடைந்திடு மடைக்கல
மானவ ரிவர்தானோ? —ஆரிவ

## 30

While shepherds watched their flocks by night
Winchester Old. C. M. S. S. S. 33.

1 இராக்காலம் பெத்தலேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க,
விண் சோதி கண்டனர்.

2 அவர்கள் அச்சம் கொள்ளவும்
விண் தூதன்: "திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்.

3 "தாவீதின் வமிசம் ஊரிலும்
மெய்க்கிறிஸ்து நாதனர்
பூலோகத்தார்க்கு இரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்.

4 "இதுங்கள் அடையாளமாம்,
முன்னணைமீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 என்றுரைத்தான்; அக்கணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினர்.

## 31

சங்கராபரணம் ஆதிதாளம்

### பல்லவி

பாரில் மாந்தர்க்காகத் தேவன் பாலனாகினார்; -உயர்
பரமசேனை ராகம்பாடிப் பரவி ஏத்தினர்.

### சரணங்கள்

1 பொன்னுலகும் இந்நிலமும் புரக்கும் வல்லவன் -புவி
முன்னணையிற் புல்லணையுற முழங்கி யார்த்தனர் —பாரில்

2 உன்னதத்திற் தேவன் மீதிலுற மகிமையும், -இந்த
மண்ணிற் சமாதானம், மனுமேல் மகிழ்ச்சி யென்றனர் —பாரில்

3 காபிரியேல், மிகாவேல் சேரக் கனத்த தூதுவர், -அங்கே
காட்சிகாணும் இடையர்முன்பு களித்தே ஆடினர் —பாரில்

4 மண்டலத்தோர் மகிழ்ச்சிகூர மன்னுநற் செய்தி -இன்று
மன்னன் தாவீது மகவாய்க் கிறிஸ்துவந்தா ரென்றனர் —பாரில்

## 32

### பல்லவி

குருசினில் தொங்கினார் பாவி உனக்காய்
அன்பரிடம் நீ இன்றே வாராயோ ?

### அனுபல்லவி

குற்றவாளி உன்னையே, குற்றமற்றோனாய்ப்
பரனிடம் சேர்த்திட இப்பாடு பட்டாரே —குருசினில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1 பாவியாம் என்னையும் மீட்டு இரட்சித்தார்
பரமசந்தோஷம் எந்தன் உள்ளில் ஈந்திட்டார்
பாவியே உன்னையும் அன்பர் அழைக்கின்றார்
வந்திடாயோ அன்பர் இயேசு வண்டையில் —குருசினில்

2 ஆதரிப்பார் இல்லையென்று ஏங்குகின் றாயோ?
ஆறுதலின் தேவன்உன் அருகில்நிற் கின்றார்
பாவத்தை வெறுத்தும் பாவியின் நேசன்
வா! என்று உன்னை வருந்தி அழைக்கின்றார் —குருசினில்

3 தேவ கிருபை உந்தனை ஏவுகையில்
தள்ளிடாதே இந்த நல் தருணத்தை
நாளை உன்னுடையதல்ல இன்றே இரட்சிப்பு
வந்திடாயோ என்று ஏசு அழைக்கின்றார் —குருசினில்

## 33

பல்லவி

சிலுவையில் மாண்டஎன் இயேசுபோல் உண்டோ?
அன்பின் தெய்வமான நேசர்க்கு ஈடுண்டோ?

சரணங்கள்

1 பாவியை இரட்சிக்கஇப் பாரினில் வந்தார்.
சாபமதைப் போக்க மாபாடும் அடைந்தார்
அழகும் இல்லாது சௌந்தர்யம் இழந்தார்
பாடுகளை ஏற்றுநம் துக்கம் சுமந்தார் —சிலுவை

2 வியாதிதனை நீக்க வ ரால் அடிபட்டார்
வேதனையும் தீர்க்க விலாவில் குத்துண்டார்
வேந்தராம் என்யேசு மாதியாகிய மானார்
மாந்தர் என்றும் வாழ்ந்திடத் தம்ஜீவனும் ஈந்தார்
—சிலுவை

3 சாவதனை வென்று மகிமை யடைந்தார்
காயம்தனைக் காண்பித்து உன்னை அழைக்கிறார்
பாவியே இன்றுன்தன் உள்ளம் உருகாதோ
பாவம்விட்டு ஆண்டவ ரிடம்நீவா ராயோ —சிலுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34

## Rock of ages cleft me

Redhead 7 s. S. S. S. 237

1. உடைபட்ட மலையே,
புகலிடந் தாருமே,
பக்கம் பட்ட காயமும்,
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவ தோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்.

2 கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
தொய்யாத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே,
நீரே மீட்பர் யேசுவே.
செந்நீர் பட்ட சிலுவை
சேருவேன் என் தஞ்சத்தை.

3 நிழல் நேரில் வாழ்விலே
கண்ணை மூடுஞ் சாவிலே
இகம் விட்டுப் பரத்தில்,
நடுத்தீர்வைத் தினத்தில்
உடைப்பட்ட மலையே,
புகலிடந் தாருமே.

35

## When I survey the wondrous cross.

Rockingham. S. S. S. 115

1 என் அருள் நாதா, இயேசுவே,
சிலுவை காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே,
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.

2 என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்?
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 கை, தலை, காலினும், இதோ!
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ?
முள்முடியும் ஒப்பற்றதே.

4 சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்?
என் சீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்.

# 36

சமாஸ் ரூபகதாளம்

## பல்லவி

விந்தைக் கிறிஸ்தேசு ராசா!
உன் தன் சிலுவை என் மேன்மை.

## அனுபல்லவி

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும், —விந்தை

1 திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக விருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்
குரிய பெருமை யாவும் அற்பமே —விந்தை

2 உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றும், வற்ற ஜீவநதியாம் :
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மை அடைந்து மேன்மையாகினேன் —விந்தை

3 சென்னி, விலா, கை, கானின்று,
சிந்துததோ! துயரோடன்பு;
மன்னு இதைப்போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்குகாணேன். —விந்தை

4 இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உனக்களிக்கிறேன் —விந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

சங்கராபரணம் ஆதிதாளம்

**பல்லவி**

கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான் — உலகுமுய்யக்
கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான்.

**அநுபல்லவி**

சித்த மூவந்து தூதர் அத்தன் பதந்துதிக்க
எத்தினமு மலகை மெத்த மனம் வருந்த —கர்

**சரணங்கள்**

1

நித்திய ஜீவ பதந்தை — எவரும் பெற்று
மெத்து மானந்தமடைய,
பத்தருவந்து பல அர்ச்சனைகள் புரிய,
உத்தமர் களாயுலகுற்ற சீடர் பொருந்த —கர்

2

சாவின் கூரையும் முறித்து — சகல பவ
நோயின் வேரையு மறுத்து,
ஆவி தணிந்துலக் வாசைகளி லுழன்றோர்
மேவிப்பரன் மெய்வழி தாவிக் கதியடைய —கர்

3

வெற்றிக் கொடியைப் பிடிப்போம் — தினமும் பரன்
நற்று தியையே நவில்வோம்;
பற்றி யாவு மறுத்துக் குற்றமகற்றி வாழ
முற்றுங் கருணைசெய்த கொற்றவன் இயேசுபிரான் —கர்

38

Jesus Christ is ris'n today

S. S. S. 158

1 இன்று கிறிஸ்து எழுந்தார்,
அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்,
அல்லேலூயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவையில் மாண்டவர்,
அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தார்,
அல்லேலூயா!

2 அவர் வெற்றி கூறுவோம்,
அல்லேலூயா!
ஸ்தோத்திரப் பாட்டுப் பாடுவோம்,
அல்லேலூயா!
இயேசு தாழ்ந் துயர்ந்தாரே,
அல்லேலூயா!
வான இராசா அவரே,
அல்லேலூயா!

3 பாடனுப வித்தவர்,
அல்லேலூயா!
இரட்சிப்புக்குக் காரணர்,
அல்லேலூயா!
விண்ணின் வேந்தன் ஆயினர்,
அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார்,
அல்லேலூயா!

## 39

யமன்கல்யாணி. ஆதிதாளம் (இஸ்ரநெதி)

### பல்லவி

மங்களம், மங்களம், யெகோவா,
சந்ததம் எங்களைக் காக்கவா;

### அனுபல்லவி

மங்களம், மங்களம், இயேசுவே
மாந்தர்க்காய் மரணத்தை ஜெயித்தோனே —மங்

### சரணங்கள்

1 கல்லறை மீதுற்ற கன்னியர்
கர்த்தரைக் காணாது கலங்கிட,
மெல்லியர்க்குத் தேவ தூதர்கள்
மெய்யான செய்தியைக் கூறினர். மங்

2 பாதாளம் இறங்கிய மூன்றும் நாள்
டாரிற் திரும்பினீர் பார்விக்காய்;
பாழும் மரணமுன் கூர் எங்கே
பாதாளமேயுன் ஜெய மெங்கே. —பல்

3 ஆனந்தம், ஆனந்தம் மாந்தர்க்கே
ஆர்ப்பரிப்போம் அன்பின் கிரிகைக்கே;
ஆனந்தம், ஆனந்தம் தூயர்க்கே,
அல்லேலூயா, பாடும் சேனைக்கே. —பல்

# 40

## I am so glad that our Father Heaven

S. S. S. 38

1 வான பிதாத் தந்த வேதத்திலே
நான் மகிழ்வேன் அன்பு சொல்லுகிறார்
விவிலிய ஆச்சரியம் யாவினுள்ளே.
ஆச்சரியம், இயேசென்னை நேசிக்கிறார்.

பல்லவி
ஆனந்தம் இயேசு நேசிக்கிறார்;
நேசிக்கிறார், நேசிக்கிறார்,
ஆனந்தம், இயேசு நேசிக்கிறார்;
நேசிக்கிறார் என்னையும்.

2 நான் மறந்தோடினும், நேசித்தென்னைச்
சென்ற இடம் வந்து தேடுகிறார்;
மீண்டவர் கையினுள் ஓடத் தன்னைத்
தந்த அந்நேசத்தால் நேசிக்கிறார்.

3 நேசிக்கிறார், நானும் நேசிக்கிறேன்,
மீட்க வந்தாத்துமம் நேசிக்கிறார்;
சாவு மரத்தில் அந்நேசங் கண்டேன்,
நிச்சயம் இயேசென்னை நேசிக்கிறார்.

4 எவ்விதம் நீ அறிவாயென்கிலோ,
இயேசுக்குத் தோத்திரம், நன்கறிவேன்
தேவசுத்தாவி என் ஆவியிலோ
சாட்சி; என் இயேசென்னை நேசிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 நிச்சயத்தால் இன்ப ஓய்வு பெற்றேன்,
நம்பும், என் இயேசென்னை வாழ்விக்கிறார்;
சாத்தான் நில்லாதஞ்சி ஓடக்கண்டேன்
நான் சொல்ல இயேசென்னை நேசிக்கிறார்.

41

## Oh. how He Loves

Caritas 8. 4. 8. 4. 8. 8 4.

1 யாரிலும் மேலான அன்பர்
மா நேசரே!
நம்பினோர்க்கு நல்ல நண்பர்
மா நேசரே!
மற்றும் நேசர் விட்டுப் போவார்,
நேசித்தாலும் கோபங்கொள்வார்,
இயேசுவோ என்றென்றும் விடார்,
மா நேசரே!

2 என்னைத் தேடிச் சுத்தஞ் செய்தார்,
மா நேசரே;
பற்றிக்கொண்ட என்னை விடார்,
மா நேசரே!
இன்றும் என்றும் பாதுகாப்பார்;
பற்றினோரை மீட்டுக்கொள்வார்,
துன்ப நாளில் தேற்றல் செய்வார்;
மா நேசரே!

3 நெஞ்சமே, நீ தியானம் பண்ணு
மா நேசரை;
என்றுமே விடாமல் எண்ணு
மா நேசரை;
எந்தத் துன்பம் வந்தும் நில்லு;
நேரே மோட்ச பாதை செல்லு;
இயேசுவாலே யாவும் வெல்லு;
மா நேசரே!

4 என்றென்றைக்கும் கீர்த்தி சொல்வோம்,
மா நேசரே!
சோர்வுற்றாலும் வீரங்கொள்வோம்,
மா நேசரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நோக்கம் சித்தி செய்வார்,
நம்மை அவர் சேர்த்துக்கொள்வார்,
மோட்ச நன்மை யாவும் ஈவார்;
மா நேசரே?

# 42

## Jesus is our shepherd

Goshen S. S. S. 1153

*1*

இயேசு எங்கள் மீட்பர்
கண்ணீர் துடைப்பார்
மார்பில் சேர்த்தணைத்துப்
பயம் நீக்குவார்;
துன்பம் நேரிட்டாலும்;
இன்பம் ஆயினும்;
இயேசுவின் பின் செல்வோம்
பாலர் யாவரும்.

*2*

நல்ல மேய்ப்பர் சத்தம்
நன்ருய் அறிவோம்;
காதுக் கின்பமாகக்
கேட்டுக் களிப்போம்;
கண்டித்தாலும், நேசர்
ஆற்றித் தேற்றுவார்,
நாங்கள் பின்னே செல்ல
வழி காட்டுவார்.

*3*

ஆட்டுக்காக மேய்ப்பர்
இரத்தம் சிந்தினர்;
அதில் மூழ்கினேரே
சுத்தர் ஆகுவார்;
பாவ குணம் நீக்கி
முற்றும் இரட்ச்சிப்பார்
திவ்விய தூய சாயல்
ஆக் மாற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43

## Jesus Loves me this I know

### S. S. Sr 1155

1

இயேசென்னை நேசிக்கிறார்,
வேதத்தில் அதைச் சொன்னார்;
சிறுபிள்ளைக் கவரே
பெலவீனர் பெலனே

பல்லவி

ஆம், இயேசு அன்பே
ஆம், இயேசு அன்பே
ஆம், இயேசு அன்பே
என் வேதம் சொல்லுமே.

2

இயேசு அன்பால் மரித்தார்
மோட்ச வாசல் திறந்தார்,
பாவம் எல்லாம் நீக்கிட,
சிறு பிள்ளையைச் சேர்க்க.

3

இயேசு அன்பே இப்போதும்,
என்னில் பெலன் குறைந்தும்,
மோட்சம் விட்டிறங்கினார்,
மேவிக் காத்துக் கொள்ளுவார்.

4

இயேசு அன்பால் சேருவார்,
வழியில் என்னைக் காப்பார்;
அவரை நான் நேசிக்கில்,
என்னைச் சேர்ப்பார் மோட்சத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44

Gentle Jesus, meek and mild
S. S. R. 1149

1

சாந்த முள்ள யேசுவே!
பாரும் பாலன் முகத்தை;
என்னில் தயை வைத்திடும்
என்னில் தங்கியருளும்.

2

உம்மை நாடிப் பற்றுவேன்,
என்னை ஏற்றுக் கொள்ளுவீர்;
மோட்ச இராச்சியத்திலே
தாரும் எனக்கிடமே:

3

இன்ப முகங் காட்டுவீர்,
என்னைக் கையில் ஏந்துவீர்,
உமக் கேற்றோ ருகவே
ஆசீர்வாதம் தாருமே.

4

தீயோர் செய்கை ஒன்றுமே,
நான் செய்யா திருக்கவே,
என்னில் ஆவி ஊற்றிடும்,
நெஞ்சைச் சுத்திகரியும்.

5

ஆ! அன்புள்ள இயேசுவே,
ஏழை யேனைப் பாருமே;
என்னை அன்பாய் இரட்சியும்,
மோட்ச வீட்டிற் சேர்த்திடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45

குரஞ்சி — ஆதிதாளம்

### திபதைகள்

1 வா, எங்கள் சுவாமி, வா, இந்த நேரத்திலே ;
வத்து நின் சுந்தரக் கையால் தந்திடு நன்மை யெல்லாம்.

2 வந்தனம், வந்தனம், இராசா, சந்ததம் எங்களைக் கா, வா,
வல்லபம் தந்திடைக் கட்டி மாநகரின் வழி சேர.

3 இயேசையா, உன்னையல்லாமல் எங்களுக்காரு மில்லை;
நீசரென்றெம்மை விடாதே, நின்னடி தஞ்சமையா.

4 உன்னடியால் எங்கள் வம்சம் உன்னை அடைந்திடவே:
உச்சித இரட்சண்ய வேலை ஊக்கமாய்ச் செய்திடவே.

5 இராப்பகல் எங்களைக் காரும், போக்கு வரத்திலெல்லாம்;
கூப்பிடும் போதெல்லாம் கேட்டு, கொண்டணைத் தன்பு
செய்வாய்.

6 கல்வாரி இராயனின் புண்யம் கன்மிக ளெங்களுக்கே ;
அல்லேலூயா சொல்லும் நாங்கள் ஐயனின் பொன்னடிக்கேவர.

## 46

குறிஞ்சி — ஆதிதாளம்

### கண்மணிகள்

1 துள்ளித் துள்ளிப் பாலனே
பாடிப் பாடி ஓடியே
இயேசுவண்டை சேரலாம்,
பாலர் நேசர் அவர்தாம்;

2 பெத்தலகேமிற் பிறந்தார்,
பெற்றூர் தந்தைக்கமைந்தார்,
கோபம் வஞ்சம் துர்க்குணம்
அவரிட மில்லையாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 சிறுபிள்ளை, நீயும் வா
நெஞ்சை இயேசுவுக்குத்தா:
அவர் கையில் ஏந்துவார்
ஆசீர்வாதம் தருவார்.

4 வாரும் சிறுபாலரே,
பயமில்லை, நேசரே;
துன்பம் துக்கம் நீக்குவார்,
கண்ணீர் முற்றும் துடைப்பார்.

5 பொற்கிரீடம் அவரே
சூட்டுவார், என் தோழரே,
தெய்வ தூதரோடேயும்
கீதம் சொல்வோம் என்றைக்கும்.

## 47

## கர்த்தருடைய செபம்

நாதநாமக்கிரியை — ஆதிதாளம்

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரமபிதாவே, எந்நாளும்
பரிசுத்தப்படுக உம் நாமம்
பரிவுடன் வருக உம் இராச்சியம்;
பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப்படுவது போல்
தரணியிலுமது சித்தமுமே
தவறாது செய்யப்படுக சதா:
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக் கீந்தருளும்!
நன்றயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன் நயம்போலெம் பிழை மன்னியும்:
தேவே, சோதனைக்கெமை விலக்கி
தீமையினின் றெமை இரட்சியுமே;
மேவும் இராச்சியம், வல்லமை, மகிமை
மிகவும் உமதென்றுமே.

ஆமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48

**பல்லவி**

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

**சரணம்**

1 வல்ல ஜீவ வாக்குத் தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அருந் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே - என்னை.

2 பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயதா தெவருமென்னை - என்னை.

3 தாய்தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா என்தன் புகலிடமே - என்னை.

4 என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே - என்னை.

49

**பல்லவி**

கல்வாரியில் மாமலையில்
கள்வர்கள் நடுவினிலே
சிலுவையின் மீதினிலே
சிந்திய இரத்தமே.

**சரணம்**

1 ஜீவன் ஈந்தார் சாபம் போக்க
பாவியாய் மாறினார்
ஜெயம் பெற்று ஜீவித்திட
சிலுவை ஏகினார் — கல்வாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 பாவக்கறை நீங்கிடவே
பாவியாய் மரித்தார்
பாதம் சேர ஜீவ வழி
பாதையைக் காட்டினார். — கல்வாரி.

3 தாகமுடன் ஏகி உந்தன்
தாகத்தைத் தீர்த்திடவே
தாரணியில் மானிடனே
தன்னிடம் சேர்த்திடவே — கல்வாரி

50

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

இயேசு ராஜனின் திருவடிக்கே
சரணம் சரணம் சரணம்.
ஆத்ம நாதனின் மலரடிக்கோ
சரணம் சரணம் சரணம்.

சரணம்

1 மா தூயர் தூயரெனப் போற்றிடும் - விண்
தூதரோடே நாமும் போற்றுவோம்
மா தேவ சபை பூவில் வாழ்த்தவே
சரணம் சரணம் சரணம் — இயேசு.

2 ஆயனே தூய அருள் நாதனே - மெய்
வேதனே திவ்விய வாசனே
என் சீவனே ஆத்ம நேசனே
சரணம் சரணம் சரணம் — இயேசு.

3 துன்ப துயரம் சூழும் வேளையும் -வெகு
கஷ்ட நஷ்டம் வரும் நாளிலும்
அன்பருக்கருள் தரும் இன்பமே
சரணம் சரணம் சரணம். — இயேசு.

4 ஆடுபோல அடிக்கப்பட்டீரே - அன்பாய்
தேடி எம்மை மீட்க வந்தீரே
எங்கள் ஜீவ பலியாக மாண்டீரே
சரணம் சரணம் சரணம். — இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51

சரணம்

இயேசுவின் நாமத்தைப் போற்றிடுவோம்
என்றுமவர் துதி சாற்றிடுவோம்,

பல்லவி

1 கரடு முரடான பாதையினில்
கால் தடுமாறித் தியங்குகையில்
கருணையாய்ப் பேசிக் கரமதை நீட்டிக்
காத்திடும் தயவைப் பாடிடுவோம் — இயேசு.

2 பாவத்தின் பாரத்தை நீக்கினரே
சாபத்தின் கோரத்தைப் போக்கினரே
சாகாது வாழ சாவதை வென்ற
தேவகுமாரனைப் பாடிடுவோம் — இயேசு.

3 யோர்தானைக் கடந்திடும் நேரமதில்
அணைத்திடுவார் அவர் மார் பதனில்
அக்கரை சேர்த்து அகமகிழ்விக்கும்
அன்பரின் நாமத்தைப் பாடிடுவோம் — இயேசு.

## 52

1 எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே உந்தன்
நாமத்தைப் போற்றிடுவேன்.

பல்லவி

ஆ ஆனந்தம் ஆனந்தமே
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே.

2 பெற்ற தாயும் 'என் தந்தையும் ஆனவரே
மற்ற எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறினும் நீரோ
வாக்கு மாறாதவரே ... ஆ ஆனந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 பொன் வெள்ளியுமோ வெறும் பேர் புகழோ
பண ஆசையும் வீணல்லவோ
உந்தன் பரலோக செல்வமும் என்னரும் இயேசுவே
போதும் எனக்குத் தந்திரே — ஆ ஆனந்தம்.

## 53

1 போற்றித் துதிப்போம் என் தேவ தேவனை
புதிய இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா இயேசுவை நாம்
என்றும் பாடித் துதிப்போம்.

பல்லவி

இயேசு என்னும் நாமமே
என் ஆத்துமாவின் கீதமே
என் நேசர் இயேசுவை நான் என்றும்
ஏற்றி மகிழ்ந்திடுவேன்.

2 கோரப் பயங்கரமான புயலின்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம்கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன் — இயேசு.

3 தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னை அவர் கையில் தந்து ஜீவ
பாதை என்றும் ஓடுவேன். — இயேசு.

## 54

இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடை படுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன் செல்வோர் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன் செல்வோர் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே,
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்.

2 தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினால் எழுந்து செல்வீர் — திறவுண்ட.

3 எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்?
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்;
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள் — திறவுண்ட.

4 விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒரு மனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும் — திறவுண்ட.

5 இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே — திறவுண்ட.

6 இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இலங்கையின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமம் விரைந்திடுமே — திறவுண்ட.

## 55

பல்லவி

உண்மையாம் உபவாசம் எது?
உண்ணாமல் இருப்பதா அது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1 உள்ளத்தில் அன்பினையே பேணுமல்
உடல் தன்னை ஒடுக்கினுல் போதுமா?
சடங்காக நோன்பினை மேற்கொண்டால்
சிந்தையில் மாற்றமே ஆகுமா? — உண்மையாம்;

2 உடையின்றி தவித்திடும் ஒருவனுக்கு
உடையீந்தால் அதுவன்றே உபவாசம்,
தடையின்றிப் பிறருக்குத் தயை காட்டி
சடைப்பின்றி உழைப்பதே உபவாசம் — உண்மையாம்

3 துன்பத்தில் இருப்போரின் துயர் நீக்கி,
தனிமையில் வாடினுல் துணையாகி,
எளியோரின் தோழனுய் இணைந்தென்றும்
இருப்பதே உள்ளத்தின் உபவாசம். — உண்மையாம்

## 56

பல்லவி

இறைவன் இன்று பவனிவந்தால் என்ன நடக்கும்?
கறைபடிந்த மனுக்குலத்திற் கென்ன கிடைக்கும்?

சரணங்கள்

1 தெருக்களிலே அமைதி வரும்
தேனும் பாலும் வழிந்தோடும்,
வருந்துவோர்க்கு வழிபிறக்கும்
வானருளின் மடை திறக்கும் இறை:

2 திருச்சபையில் புதுமை வரும்
தன்னலமோ பறந் தோடும்,
சமயத்திலே மலர்ச்சி வரும்
சாந்த குணம் எழுந்தாடும் இறை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 அரசியலில் நேர்மை வரும்
அன்பின் வழி ஆட்சி வரும்,
இமயம் முதல் குமரி வரை
இறை அன்பின் கொடி பறக்கும் — இறை.

4 பார்முழுதும் ஒன்று படும்
பிரிவினைகள் தகர்ந் தோடும்,
பாமரர்க்கு வாழ்வு வரும்
பரமன் துணை இணைந்துவரும் — இறை

## 57

தோத்திரம் பாடிப் போற்றுவோம்
தோத்திரம் இயேசு இராஜனுக்கே,
ஆதியு மந்தமு மில்லோனே,
அருபனே, உமக்கென்றும் தோத்திரம்.

### பல்லவி

அல்லேலூயா - அல்லேலூயா
அல் - லேலூயா
பொற்கரனே ஓமேகாவே.

2 பொன்னகர் மன்னன் பூவில் வந்தார்
புல்லணை மீதிலே, தோத்திரம்.
பட்சமுற்று எந்தன் பாரம் தீர்த்த
பெத்தலை வாசனே தோத்திரம்.

3 மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா, உம் அன்பினில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் இந்தத் தாரணியில்
மனுவான அன்புக்காய் தோத்திரம்.

4 மங்களமே, சீயோன் மணாளா,
மாறாத பூரண சீராளா,
மங்கிடா நித்திய வாசனே,
மாசற்ற அன்புச்காய் தோத்திரம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58

கண்ணிகள்

வருத்தப்படுபவர்க்கும் பாரம் சுமப்பவர்க்கும்
ஆதரவாய் உள்ளோனே, ஐயாவே இயேசுநாதா,
உலகமெனை வதைக்க அலகையெனைத் தொடர
சிலுவையடியில் வீழ்ந்தேன், இரட்சகா இயேசு நாதா.

செய்வதின்னதென்றறியா திவர் செய்பிழை மன்னித்திடும்
அப்பா பிதாவே யென்றாய், இரட்சகா இயேசு நாதா,
கள்ளமில்லாத கள்வன் மெல்ல செபித்ததுவும்
இன்றே பரதிசென்றாய், இரட்சகா இயேசுநாதா.

தாயே அதோ உன் மகன், யோவான் இதோ உன் அன்னை
தாய்போல் அணைப்பாய் என்றாய் இரட்சகா இயேசு நாதா,
என்தேவனே தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீரோ
என்றேங்கி நைந்தழுதாய், இரட்சகா இயேசு நாதா.

முள்ளாணி வெயில் நிந்தை நைய உனைவதைக்க
தாக மெனக்கு என்றாய், இரட்சகா இயேசுநாதா,
தொல்வினை தீர்க்கும் இரட்சை நன் நிறைவேறிய பின்
எல்லாம் முடிந்ததென்றாய், இரட்சகா இயேசு நாதா.

சித்த முவந்திச்சணம் ஒப்பித்தேன் உன் கரத்தில்
அப்பா என் ஆவி என்றாய், இரட்சகா இயேசு நாதா,
இரத்தத்தில் மூழ்கி நின்றேன் பித்தன் உயிர் பிழைத்தேன்
நித்தம் உம் தொண்டு செய்வேன், இரட்சகா இயேசுநாதா.

59

ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களே
யாவரும் தேமொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லவில்லை அல்லவில்லை
ஆனந்தமாய்ப் பாடிடுவோம்.

2. புதிய புதிய பாடல்களைப்
புனைந்தே பண்களும் சேருங்களே
துதிகள் நிறையும் கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களே - அல்லேலூயா.

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களாம்
மிஞ்சும் ஓசைத் தாளங்களால்
மேலும் பரவசம் நாடுங்களே - அல்லேலூயா.

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சியோனின் கீதம் பாடுங்களே - அல்லேலூயா.

# 60

1. அல்லேலூயா, கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்.

பல்லவி

இராஜாதி இராஜனும் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்.

2. தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்.

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய்ச் செலுத்தியே துதியுங்கள்.

5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழுப்பினூர் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை மீட்கப்பட்டோர் நிரப்புவார் துதியுங்கள்.

## 61

1. தொல்லைக கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொற் கேட்கும் செவியிலே,
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் உன்னைக் காக்க வல்லோர்.

பல்லவி
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு!
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு,
காத்திடுவார் என்றுமே.

2. ஐயம் இருந்ததோர் காலத்தில்
ஆவிக் குறைவால்தான்
மீட்பர் உதிர பெலத்தால்
சத்துருவை வென்றேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பயம் யாவும் நீங்கிற்றே
இயேசு கை தூக்கினர்
முற்றும் என் உள்ளம் மாறிற்றே
இயேசென்னைக் காக்க வல்லோர் - காக்கும்

3: என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன்
எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய்
எவ்வள வன்பு கூர்ந்தார்
என்னென்ன துன்பங்கள் வந்தாலும்
அவர் என்னைக் கைவிடமாட்டார் - காக்கும்;

## 62

பல்லவி

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரம் உமக்கே:

அனுபல்லவி

உந்தனுக்கு ஊழியஞ் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும் - தந்.

சரணங்கள்

1: சீவகாலம் முழுவதும்
தேவ பணி செய்திடுவேன்,
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தில் வைத்து தந்:

2: உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தில் நாதா, வெல்லுவேன் - தந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்,
இயேசுவே, அங்கே இதோ போகிறேன் - தந்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அட்டதிக்கும் ஆளும் தேவனே,
அடியேன் உம்மில் அமரச் செய்யும் - தந்

5. ஒன்றுமில்லை நான், ஐயா!
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்று அடியேனை நிரப்பும் - தந்

## 63

1. உன்னத மானவரின் — உயர்
மறைவி விருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சலாக்கியமே.

பல்லவி

அவர் செட்டையின்கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்;

2. தேவன் என்னடைக்கலமே - என்
கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே - அவர்

3. ஆயிரம் பதினாயிரம் - பேர்கள்
உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒருகாலத்தும் உன்னை அணுகிடாதே,
உன் தேவன் உன்தாபரமே - அவ

4. இரவில் பயங்கரத்திற்கும் - பக
லில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் - அவர்.

5. உன் வழிகளிலெல்லாம் - உன்னைத்
தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறுதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் - அவர்.

6. தேவன் உன் அடைக்கலமே - ஒரு
பொல்லாப்பும் உனைச் சேருமா?
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் – அவர்

7. சிங்கத்தின் மேலும் நடந்து - வலு
சர்ப்பத்தையும் மிதித்து
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் – அவர்.

8. ஆபத்திலும் அவரை - நான்
கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் - அவர்.

## 64

### பல்லவி

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்.

### சரணங்கள்

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்தே
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன் - எனக்

2. மலைகள் பெயர்ந்தகன்றிடினும்
நிலைமாறி புவியதிர்ந்திடினும்
மாறிடுமோ அவர்கிருபை எந்நாளும்?
ஆறுதல் எனக்கவரே — எனக்

3. என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல்தேவன்
இராப்பகல் உறங்காரே — எனக்

4. வலப்பக்கத்தில் நிழல் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப்படுத்தாதே — எனக்

5. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்கும் என்தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இது முதலாய் — எனக்

65

பல்லவி

நந்தானைத் துதிப்போமே — தேவ
தாசரே கவி பாடிப்பாடி

அநுபல்லவி

விந்தையாய் நமக்கனந்தனந்தமான
விள்ளற் கரியதோர் நன்மை மிகமிகத் — தந்

சரணங்கள்

1. ஒய்யாரத்துச் சீயோனே — நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயன் இயேசுக்குன்தன் கையைக் கூப்பித்துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும் — தந்

2. கண்ணுரக் களித்தாயே — நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக் கடங்காத எத்தனையோ நன்மை
இன்னு முன்மேற் சோஞ மாரிபோற் பெய்துமே — தந்

3. சுத்தாங்க நற்சபையே — உனை
முற்ருகக் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சக்தியாக்கத் தமின்
இரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம் — தந்

4. தூரந்திரிந்த சீயோனே. — உனைத்
தூக்கியெடுத்துக் கரத்திலேந்தி
ஆரங்கள்பூட்டி யலங்கரித்தே உனை
அத்தன் மணவாட்டி யாக்கினதே. என்னே! — தந்

## 66

### பல்லவி

திருப்பாதம் நம்பிவந்தேன்
கிருபைநிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமுகத்திலே;

### சரணங்கள்

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத் தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் — திருப்பாதம்

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்ப துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோ டென்னை நோக்கிடுமே — திருப்பாதம்

3. மனம் மாற ..ாந்தன் நீரல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன் — திருப்பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. என்னைக் கைவிடா திரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே — திருப்பாதம்

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப்பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே — திருப்பாதம்

6. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன் — திருப்பாதம்

## 67

### பல்லவி

இயேசுவை நாம் எங்கே காணலாம்
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்

### அனுபல்லவி

பனிபடர்ந்த மலையின் மீது பார்க்க முடியுமா?
கனிநிறைந்த சோலை நடுவே காண முடியுமா?

### சரணங்கள்

1. ஓடுகின்ற அருவியெல்லாம் தேடி அலைந்தேனே
ஆடுகின்ற அலைகடலில் நாடி அயர்ந்தேனே
தேடுகின்ற என் எதிரே தெய்வத்தைக் காணேனே
பாடுபடும் ஏழை நான் அழுது வாடினேனே — இயேசு

2. வானமதில் பவனிவரும் கார்முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே காட்டிட மாட்டீரோ
காலமெல்லாம் அவனியின்மேல் வீசும் காற்றேநீ
கர்த்தன் இயேசு வாழுமிடம் கூறிட மாட்டாயோ — இயேசு

3. கண்ணிரண்டும் புனலாக நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான் திருமுறை முன்பாக
விண்ணரசர் அன்புடனே கண்விழிப்பாய் என்றார்
கண்விழித்தேன் என் முன்னே கர்த்தன் இயேசு நின்றார் — இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68

நீ இறைவனைத் தேடிக் கொண்டிருக்க
இறைவன் உன்னைத் தேடுகிறான்
நீ அவர்புகழ் பாடிக்கொண்டிருக்க
அவரோ உன் புகழ் பாடுகிறார்.

1. அழுகையில் அவரை அழைத்திடுங்கள்
அழுகுரல் கேட்டு அரவணைப்பார்
நீதியைப் பூவினில் இறைத்திடுங்கள்
நீதியின் தலைவன் சிரித்திடுவார்.

2. இரக்கம் கொண்ட நெஞ்சினிலே
இனிமை பொழிந்திட வந்திடுவார்
தூய்மையின் வழியில் நடந்திடுங்கள்
வாய்மையின் உருவில் வளர்ந்திடுவார்.

69

1. முள்ளுள்ள புதர்களின் மத்தியில்
ஒரு ரோஜா புஷ்பம் போலவே
மா சௌந்தர்யமானவரே
இயேசு நாதனே எம் தேவனே

**பல்லவி**

போற்றுவோம் எங்கள் தேவனை
ஜீவ நாட்களிலும் மறு யாத்திரையிலும்
நன்றியோடே நாம் பாடிடுவோம்

2. தந்தை தாயும் என் சொந்தமானோரும்
கைவிட்டாலும் அவர் கைவிடார்
துன்பத்தில் எமைத் தாங்கிடுவார்
இன்பங்கள் எமக்கீந்திடுவார் — போற்றுவோம்

3. எமக்காக உயிர் ஈந்தாரே
சுமந்தாரே எம் பாவங்களை
அந்த அன்புக்கு ஈடு உண்டோ
அவர் கிருபைக்கு அளவு உண்டோ — போற்றுவோம்

4. இதயம் வெம்பிக் கசந்து நொந்து
மனக்கிலேசம் அடைந்திடுங் கால்
மனப் புண்ணில் எண்ணெய் தடவி
மன ஆறுதல் தந்திடுவார் — போற்றுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70

எனக்காய், ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழிநடத்துவாரே
என்னைச் சந்திக்க வந்திடுவாரே

பல்லவி

இயேசு போதுமே, போதுமே
இயேசு போதுமே, போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாம்சமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே — இயேசு

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார் — இயேசு

4 மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும் — இயேசு

71

பல்லவி

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் — சுவாமி
என்றென்றும் நான் பாடுவேன்

அனுபல்லவி

இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

சரணங்கள்

1 வானதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் வாழ்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே — எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனித் தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே — எண்

3. நீரினில் வாழ்கின்ற யாவும் – இந்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே — எண்

## 72

நன்மைகளால் நிறைந்துள்ள நெஞ்சங்களே
இன்று நன்றி கூறும் உணர்வாலே மகிழுங்களே

1

வானமும் புவியும் வழங்கு பல்லுயிர்களும்
ஞானமாய் அமைந்த மாபெரும் அன்பே
உலவும் பொருளே உன்னத ஒளியே
உம் திருப்பாதம் நாம் தொழுதிடுவோம்

2

பற்பல கிருபை பரிவுடன் அளித்தாய்
வாழ்க்கையின் பாதைக்கு ஒளியானாய்
அருளின் வடிவே அன்பின் உருவே
ஆவலுடன் நின்தாள் பணிந்தோம்

3

உன்னத நோக்க உறைவிடமான
சின்னமாய் அமைந்த எம் கல்லூரி
ஓங்கியே வளர உன்பணி புரிய
தாங்கியே என்றும் நீதயை புரிவாய்

All things bright and beautiful Royal Oak
M. H. B. 851 7, 6, 7, 6 with refrain

73

பல்லவி

நேர்த்தியான தனைத்தும்
சின்னம் பெரிதெல்லாம்
ஞானம் விந்தை ஆனதும்
கர்த்தாவின் படைப்பாம்

1. பற்பல வர்ணத் தோடு
மலரும் புஷ்பமும்
இனிமையாகப் பாடிப்
பறக்கும் பட்சியும்

2. மேலோர் கீழாஞேரையும்
தத்தம் ஸ்திதியிலே
அரணில் குடிசையில்
வசிக்கச் செய்தாரே

3. இலங்கும் அருவியும்
மா நீல மலையும்
பொன்னிற உதயமும்
குளிர்ந்த மாலையும்

4. வசந்த காலத் தென்றல்
பூங்கனித் தோட்டமும்
காலத்துக் கேற்ற மழை
இவையோனின் காந்தியும்

5. மரமடர்ந்த சோலை
பசும் புல் தரையும்
தண்ணீர் மேல் தாமரைப்பூ
மற்றெந்த வஸ்துவும்

6. ஆம் சர்வ வல்ல கர்த்தா
எல்லாம் நன்ருகச் செய்தார்
இதை நான் பார்த்துப் போற்ற
நாவையும் சிருஷ்டித்தீர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 74

சஹானா — சாப்புதாளம்

### பல்லவி

ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க
உனக்கென்ன குறை மகனே.

### அநுபல்லவி

சிறுவம் தொட்டுனை ஒரு செல்லப் பிள்ளைபோல் பார்த்த
உரிய தந்தை உனக்கு உயிரோடிருப்பார் என்றும் — ஒரு

### சரணங்கள்

1. கப்பலின் அடித்தட்டில் - களைப்புடன் தூங்குவார்
கதறுமென் சத்தம் கேட்டால் - கடல் தன்னை அமர்த்துவார்
எப்பெரிய போரிலும் ஏற்ற ஆயுதமீவார்.
ஏழைப் பிள்ளை யுனக்கு - ஏற்ற தந்தை நானென்பார் — ஒரு.

2. கடல் தனக்கதிகாரி - கர்த்தரென்றறிவாயே
கடவாதிருக்க வெல்லை - கற்பித்தாரவர் சேயே
விடுவாரோ பிள்ளையைத் தாய் - மேதினியிற்றனியே
மெய்ப்பரனை நீதினம் - விசுவாசித் திருப்பாயே — ஒரு

3. உன்னாசை விசுவாசம் - செபமும் வீணாகுமா
உறக்கமில்லாதவர் கண் - உன்னை விட்டொழியுமா?
இந்நில மீதிலுனக் கென்ன வந்தாலும், சும்மா
இருக்குமா அவர் மனம் - உருக்கமில்லாதே போமா? — ஒரு

4. உலகம் பேயுடலாசை - உன்னை மோசம் செய்யாது
ஊக்கம் விடாதே திரு - வுளமுனை மறவாது
இலங்கும் பரிசுத்தாவி - எழில் வரம் ஒழியாது
என்றும் மாறாத நண்பன் - இரட்சகருடன் சேர்ந்து — ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் அல்லேலூயா

1

பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார் — ஆனந்தம்

2

வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டித் துன்பம் எல்லாம் நீக்கி மீட்டிட்டார் — ஆனந்தம்

3

சேற்றில் வீழ்ந்த என்னை அவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார் — ஆனந்தம்

4

தந்தை தாயும் நண்பருமாய் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன் — ஆனந்தம்

5

இவ்வுலகப் பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காணக் காத்திருக்கிறேன் — ஆனந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வாழ்த்துப்பா

1. நாடும் மாதர் கலைவளம் ஓங்கிட
நல்லோர் வாழும் வளநகர் தான்வந்தே
தேடிக் காணாச் செல்வமளிக்குங் கற்பகமே
தெவிட்டா ஞானத் திருவே தருகின்றாய்
ஈடில் லாமல் பேணுதல் செய்வாய்
எழிலார் உடுவில் மகளிர் கல்லூரி வாழ்கவே.

2. அன்பே வாய்மை பொதுநல சேவைகள்
ஆர்க்குந் தாழ்மை பணிவுகள் ஆதரவே
துன்பம் போக்கும் கிறிஸ்த சமயத் திருவோடு
தூண்டாக் கல்விச் சுடரே தருகின்றாய்
இன்பார் வாழ்க்கைத் திருவும் தருகின்றாய்
எழிலார் உடுவில் மகளிர் கல்லூரி வாழ்கவே.

3. ஆசிய நாட்டுப் பழமையுங் கொண்டாய்
ஆண்டுகள் பலவும் சேவையும் செய்தாய்
நேசத் தாயர் சேவைத் தொண்டர்பலர் தந்தாய்
நிகழ் காலம் போலினி வருநாள்
ஈசன் நாடும் இதுதான் எனவருள்வாய்
எழிலார் உடுவில் மகளிர் கல்லூரி வாழ்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகின் - யாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org